விஷயம். அப்படி ஏழ்மையில் இருந்த போதிலும் நித்யானந்தாவிடம் கடைசி வரை எந்த உதவியும் கேட்கவில்லை அருணாசலம். இப்படி தந்தை, தாத்தா ஆகியோரை நித்யானந்தா புறக்கணித்தாலும், ஏகப்பட்ட பக்தர்கள் நாடு முழுவதும் அவர் மீது நம்பிக்கை வைத்திருந்தார்கள்.

நம்மிடம் பேசிய பக்தர் ஒருவர், "எனக்குத் தெரிந்த ஒருவர் தென் மாவட்டத்தில் இருக்கிறார். அவருக்கு நீண்ட நாட்களாகப் பிள்ளை இல்லை. நித்யானந்தாவின் பக்தராக ஆன பிறகு அவருக்குப் பிள்ளை பிறந்தது. 'நித்யானந்தாவின் அனுக்கிரகத்தால்தான் பிள்ளை பிறந்தது' என்று கூறி தன் வீட்டில் நித்தியானந்தா சிலை ஒன்றையே வெள்ளியில் செய்து வைத்து பூஜை செய்து வருகிறார். அப்படி நம்பிக்கை வைத்த பக்தர்களை இதுமாதிரி சல்லாபக் காட்சிகள் மூலம் சிதறடித்துவிட்டாரே" என்று ஆவேசப்பட்டார்.


ஆஸ்ரமம்

அதே நேரத்தில் நம்மிடம் பேசிய வேறு ஒரு திருவண்ணாமலை பக்தர், "நிலம் வாங்குவது தொடர்பாக ஒரு அரசியல் வி.ஐ.பி.க்கும், நித்யானந்தாவிற்கும் நீண்ட நாட்களாகத் தகராறு இருந்து வந்தது. அதில் 'ஓர் இறுதி முடிவிற்கு வாருங்கள்' என்று சாமிக்கு நெருக்கடி கொடுத்தார்கள். அது நடக்கவில்லை. அந்தக் கோபத்தில் இந்த காட்சிகள் வெளிவந்திருக்கலாம். அல்லது காட்சிக்கு உரியவரே ஏதோ ஒரு கோபத்தில் இந்தக் காட்சிகள் அடங்கிய சி.டி,க்களைக் கொடுத்திருக்கலாம். எது எப்படியிருந்தாலும், நம்பியிருந்த எண்ணற்ற பக்தர்களின் மனதில் இடி விழுந்தது போலிருக்கிறது நித்யானந்தாவின் செயல்பாடுகள்" என்றார்.

நாம் நித்யானந்தாவின் பள்ளிப்பருவத் தோழர்களான மாணிக்கவாசகம், முருகன், விஷ்ணுராஜ் போன்றோரிடம் பேசினோம்.

"ராஜசேகர் (நித்யானந்தா) அப்போதே நிறையப் பெண்களுடன் பேசுவான். அவன் சுபாவம் அது. பெண்களிடம் வெளிப்படையாகப் பழகுபவன். சின்ன வயதிலிருந்தே பவழக்குன்று மலையில் உள்ள முருகன் கோயிலுக்கு சென்று எப்போதும் தியானம் செய்வான். டி.வி.யில் பார்த்த பிறகு, 'நம்ம ராஜசேகரா இப்படி?'ன்னு ஆச்சரியப்பட்டுப் போனோம். எங்களுக்கு எல்லாம் அவனுடன் படித்தோம்னு சொல்லவே கூச்சமாக இருக்கிறது" என்றார்கள்.

அடுத்து நாம் ஆஸ்ரமம் அமைந்துள்ள அடி அண்ணாமலை ஊராட்சித் தலைவர் பாபுவிடம் பேசினோம். அவர், "டி.வியில் அந்தக் காட்சிகளைப் பார்த்ததில் இருந்து எங்க கிராமத்தினர் எல்லோரும் கோபத்தின் உச்சியில் உள்ளனர். 'இனி அந்த சாமியார் இங்கு வரக் கூடாது' என்று ஒரு மனதாக முடிவெடுத்துள்ளோம். எங்கள் உணர்வுகளைப் புரிந்துகொண்டு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். இல்லையேல் மக்களின் உணர்வுகளையும், ஆவேசத்தையும் தடுக்க முடியாது" என்று கோபப்பட்டார்.

கோட்டாங்கல் கிராமத்தில் உள்ள ஆஸ்ரம பக்தர் மணி நம்மிடம், "சமீபத்தில் நித்யானந்தாவின் பிறந்தநாளுக்காக இங்கு சிறப்பு நிகழ்ச்சிகள் நடைபெற்றன. அதில் பக்திப் பாடலுக்கு ஆனந்த நடனம் ஆடும் நிகழ்ச்சியும் அன்று

## 'இது வெளிநாட்டு சதி'!

ராமகிருஷ்ணகேந்திர நிறுவனர் சேலம் சிவ சொரூபானந்தா மற்றும் சிவசேனா கட்சியின் மாநில இளைஞரணித் தலைவர் சசிகுமார் ஆகியோரிடம் நித்யானந்தா–நடிகை காட்சிகள் குறித்துப் பேசினோம். அவர்கள், "கடந்த 31.12.2009 அன்று பெங்களூரில் நித்யானந்தா சிறப்பாக இந்து துறவியர் மாநாடு ஒன்றை நடத்தினார். 'சாதுக்களின் சங்கமம்' என்ற அந்த மாநாட்டில் தமிழகத்தில் இருந்து ஆதீனங்கள், மடாதிபதிகள் எல்லாம் கலந்து கொண்டார்கள். அதில் தமிழகத்தில் நிலவும் தீவிர மதமாற்றம் பற்றி முக்கியமாக விவாதிக்கப்பட்டது. இந்நிலையில் தற்போது கிளம்பியுள்ள அவதூறு பிரச்சாரம் திட்டமிட்டுத் தயாரிக்கப்பட்ட ஊடக வன்முறை ஆகும். இதன் பின்னணியில் வெளிநாட்டு சக்திகள் இருக்கின்றன. மதமாற்றத்தைத் தடுக்க நாங்கள் எல்லாம் தீவிரப் பிரச்சாரம் மேற்கொள்ள வேண்டும் என்று அந்த மாநாட்டில் முடிவு எடுக்கப்பட்ட நேரத்தில் இப்படி அவதூறுகளைக் கிளப்பியுள்ளது அந்நிய சக்திகளின் சதி என்பது தெளிவாகப் புரிகிறது" என்கிறார்கள்.


சிவசொரூபானந்தா


சசிகுமார்